**<u>வடக்கு மாகாணப் பாடசாலைகளில் காணப்படும் தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி மூலமான ஆசிரியர் வெற்றிடங்களுக்கு பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் - 2023</u>**

நேர்முகத்தேர்வுக்கு தோற்றும் தகைமைபெற்ற விண்ணப்பதாரர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதிகள் மற்றும் அவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட நிழற் பிரதிகள் என்பவற்றுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

1.1 தேசிய அடையாள அட்டை / செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
1.2 பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
1.3 விவாகச் சான்றிதழ் (திருமணமான பெண்கள் மட்டும் கட்டாயம் சமர்ப்பித்தல் வேண்டும்)
1.4 க.பொ.த.(சா/த) சான்றிதழ்.
1.5 பட்டச் சான்றிதழ் (ஆட்சேர்ப்பு தொடர்பான விளம்பரத்தின் பந்தி 05 இன் 05.1 பிரிவில் குறிப்பிடப்பட்டதற்கு அமைவாக)
1.6 பட்டச்சான்றிதழின் விபரணக் கூற்று (Statement / Transcript)
1.7 விரிவான பெறுபேற்று அட்டவணை (Detailed Results Sheet)
1.8 கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிட, குணநலச் சான்றிதழ். (DS-04, அண்மித்த 06 மாதங்களுக்குள் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்)
1.9 ஆட்சேர்ப்பு விளம்பரத்தின் முடிவுத் திகதியிலிருந்து உடன் முன்னர் உள்ள 06 வருட காலப்பகுதியில் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டுகளாயினும் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் பிரதி அல்லது கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் விபரங்கள் குறிப்பிடப்பட்டு வழங்கப்படும் படிவம்

    அல்லது விண்ணப்பதாரர் அல்லது பெற்றோர் வடக்கு மாகாணத்தினை பிறப்பிடமாகக் கொண்டிருப்பதுடன் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருடங்கள் வடக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக நிரந்தரமாக வசித்தமையினை உறுதிப்படுத்துவதற்கான வாக்காளர் இடாப்பின் பிரதி அல்லது கிராம அலுவலரினால் வழங்கப்பட்டு பிரதேச செயலாளரினால் மேலொப்பமிடப்பட்ட தேருநர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களின் விபரங்கள் குறிப்பிடப்பட்டு வழங்கப்படும் படிவம்

நேர்முகத்தேர்வானது பின்வரும் இடங்களில் நடைபெறும்

1. கட்டம்-1 (Panel-I – IV) - யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வளாகத்தில் அமைந்துள்ள STEPS Institute

2. கட்டம்-2 (Panel - V- X) – வடக்கு மாகாணக் கல்வி அமைச்சு வளாகம்